


ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 101 06.10.2025 திங்கள்கிழமை
Chennai Volume: 01 Issue: 101 Monday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(6–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–20

பிறை: வளர்பிறை

திதி
சதுர்த்தசி காலை 11.42 வரை பிறகு பௌர்ணமி

நட்சத்திரம்:
பூரட்டாதி காலை 6.06 வரை பிறகு உத்திரட்டாதி நாளை விடியற்காலை 5.03 வரை பிறகு ரேவதி

யோகம்
மரண/சித்தயோகம்

ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி.

எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.

சூலம் – கிழக்கு.

நல்ல நேரம் :
காலை 6–7 மணி. மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | மேன்மை |
| ரிஷபம் | நிம்மதி |
| மிதுனம் | வெற்றி |
| கடகம் | ஆசை |
| சிம்மம் | வரவு |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | பெருமை |
| தனுசு | சுபம் |
| மகரம் | நிறைவு |
| கும்பம் | ஆதரவு |
| மீனம் | போட்டி |

# நாளை அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துகிறார் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி,அக்.6:**

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடருக்கு முன்பாக அக்டோபர் 7 இல் அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துகிறார் குடியரசு துணை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன். இதன்மூலம், அவர் மத்திய அரசு மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே பாலமாக முயற்சிப்பதாகக் கருதப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடர் நவம்பரில் தொடங்குகிறது. அநேகமாக இது, பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பிறகு தொடங்கும் வாய்ப்புகள் உள்ளன. வழக்கமாக நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு ஒருநாள் முன்பாகவே அனைத்துக் கட்சி கூட்டத்தை குடியரசு துணைத் தலைவர் நடத்துவது உண்டு.

இந்த முறை கூட்டத்தொடருக்கு முன்பாகவே புதிய குடியரசு துணை தலைவரான சி.பி. ராதாகிருஷ்ணன் அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்துகிறார். அக்டோபர் 7-ம் தேதி மாலையில் நடைபெறும். இக்கூட்டத்திற்கான அறிவிப்பு அவரது அலுவலகத்திலிருந்து வெளியாகி உள்ளது.

இது, புதிய குடியரசு துணை தலைவரது எதிர்க்கட்சிகளுடனான ஒருங்கிணைப்பு மேம்படுத்தும் முயற்சியாகக் கருதப்படுகிறது. இது குறித்து நாடாளுமன்ற அதிகாரிகள் வட்டாரம் கூறுகையில், 'அனைத்து கட்சி கூட்டத்திற்கு பிறகும் குடியரசு துணை தலைவர் அடுத்தடுத்து சில முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திக்க உள்ளார்.

இவருக்கு முன்பானத் குடியரசு துணை தலைவர் ஜகதீப் தன்கர் மாநிலங்களவைத் தலைவராக இருந்த காலத்தில் எதிர்க்கட்சிகளுடனான உறவு நன்றாக இல்லை. எனவே,



இதுவரை இல்லாத வகையில் புதிய குடியரசு துணைத் தலைவரான ராதாகிருஷ்ணன், மாநிலங்களவையை மிகவும் சுமுகமாக நடத்த விரும்புகிறார். இதற்கான சில ஆலோசனைகளும் அவருக்கு ஆளும் அரசிடமிருந்து கிடைத்திருப்பதாகத் தெரிகிறது

எதிர்க்கட்சிகளுடன் சிபிஆர் சந்திப்பில் அனைவரது கவனமும் படர்ந்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்களுடன் நல்லுறவை உறுதி செய்வதற்கான அவரது முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த கூட்டம் அமையும்.' எனத் தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் 9 ஆம் தேதி நடைபெற்ற குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் தமிழரான சி.பி. ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார். இதையடுத்து அவர் மாநிலங்களவைத் தலைவர் பதவியையும் ஏற்றுக்கொண்டார். இதன் பிறகு சில எதிர்க்கட்சித் தலைவர்கள் அவரை நேரில் சந்தித்து வாழ்த்தினர்.

அதேசமயம், ஆளும் மத்திய அரசின் சார்பிலும் பல மத்திய அமைச்சர்கள் குடியரசு துணைத் தலைவரைத் தொடர்ந்து சந்திக்கின்றனர்.

டெல்லி முதல்வர் ரேகா குப்தாவும் நேற்று முன் தினம் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்தார். இதற்கு முன்பாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி உள்ளிட்ட பல தலைவர்களும் அவரைச் சந்தித்தனர்.

இதுவரை இல்லாத வகையில் புதிய குடியரசு துணைத் தலைவரான ராதாகிருஷ்ணன், மாநிலங்களவையை மிகவும் சுமுகமாக நடத்த விரும்புகிறார். இதற்கான சில ஆலோசனைகளும் அவருக்கு ஆளும் அரசிடமிருந்து கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

## இருமல் மருந்தால் குழந்தைகள் உயிரிழப்பு: மத்திய சுகாதார அமைச்சகம் அவசர ஆலோசனை

**புதுடெல்லி,அக்.6:**

ஆபத்தான ரசாயனம் கலந்த இருமல் மருந்தை உட்கொண்டதால் மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் குழந்தைகள் பலியான சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.இந்த நிலையில் இருமல் மருந்தால் குழந்தைகள் இறந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசு அவசர ஆலோசனை நடத்துகிறது. இன்று மாலை 4 மணிக்கு மத்திய சுகாதார அமைச்சகம் இந்த அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சுகாதாரத்துறை செயலாளர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதன்மை செயலாளர்கள், சுகாதாரத்துறை செயலாளர்கள் மற்றும் மருந்து கட்டுப்பாட்டாளர்கள் கலந்து கொள்கிறார்கள். காணொலி வாயிலாக இந்த கூட்டம் நடைபெறுகிறது.

இந்த அவசர கூட்டத்தில் இருமல் மருந்துகளின் பகுத்தறிவு பயன்பாடு மற்றும் மருந்துகளின் தரம் குறித்து முக்கியமாக ஆலோசிக்கப்படும்.

## குண்டுவீச்சை நிறுத்துமாறு டிரம்ப் கூறிய பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 6 பேர் உயிரிழப்பு

**ஜெருசலேம்,அக்.6:**



இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்தார். இதை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்தார். எனினும் ஹமாஸ் அமைதி காத்ததால் அதற்கு ட்ரம்ப் 3 நாள் கெடு விதித்தார்.

இந்நிலையில் அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாகவும் பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பிற நிபந்தனைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் காசா மீது குண்டுவீச்சை நிறுத்துமாறு இஸ்ரேலைகேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் ட்ரம்பின் இந்த அறிவுரைக்கு அடுத்த சில மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.முன்னதாக ஹமாஸின் ஒப்புதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அதிகாலை, "இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான டிரம்ப் அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது" என அறிவித்தது.

மேலும் காசாவில் தாக்குதலை குறைக்க ராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

## இந்தோனேசியாவில் பள்ளி இடிந்த விபத்தில் பலி எண்ணிக்கை 37 ஆக உயர்வு



**இந்தோனேசியா,அக்.6:**

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள சிடோர்ஜோ நகரில் பள்ளி கட்டிடத்தின் ஒரு பகுதி கடந்த 29-ந்தேதி இடிந்து விழுந்தது. இதில் ஏராளமான மாணவர்கள் சிக்கிக் கொண்டனர். மீட்புக்குழுவினர் விரைந்து வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

இதில் 99 மாணவர்களை மீட்டனர். இடிபாடுகளில் சிக்கிய 65 மாணவர்களை மீட்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் 14 பேர் பிணமாக மீட்கப்பட்டனர். சிலர் உயிருடன் இடிபாடுகளில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்டனர்.

இந்த நிலையில் கட்டிட இடிபாடுகளில் மேலும் உடல்கள் மீட்கப்பட்டன. இதையடுத்து பலி எண்ணிக்கை 37-ஆக உயர்ந்துள்ளது.

இன்னும் 26 பேர் இடிபாடுகளில் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறும்போது, இன்று காலை நிலவரப்படி 37 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 104 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் என்றனர்.

## இருமல் மருந்தால் பறிபோன 10 குழந்தைகளின் உயிர்: ம.பி. மருத்துவர் கைது

**போபால்,அக்.6:**

மத்தியப் பிரதேசத்தில் இருமல் சிரப் உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்ததாக வந்த புகாரைத் தொடர்ந்து, அந்த மருந்தை பரிந்துரைத்த சிந்த்வாரா பகுதியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிஎன்எஸ் சட்டப்பிரிவு 105, 276 மற்றும் மருந்துகள் மற்றும் காஸ்மெடிக்ஸ் சட்டப்பிரிவு 27 ஆகியனவற்றின் கீழ் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. அந்த மருத்துவரிடம் காவல்துறை உயரதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருவதாகத் தெரிகிறது.

முன்னதாக, மத்தியப் பிரதேசத்தில் ஒன்பது குழந்தைகள், மகாராஷ்டிராவில் இரண்டு குழந்தைகள் மற்றும் ராஜஸ்தானில் ஒரு குழந்தை என 12 குழந்தைகள் இருமல் சிரப் உட்கொண்டதால் உயிரிழந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரேசன் பார்மாவில் இந்த கோல்ட்ரிஃப் இருமல் சிரப் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தகவல் வெளியானது.

இதனையடுத்து, மத்தியப் பிரதேசத்தின் சிந்த்வாரா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குழந்தைகளின் இறப்புகளுக்கான காரணத்தை கண்டறிவதற்கு தேசிய வைராலஜி நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் நாக்பூர் எய்ம்ஸ் உள்ளிட்ட பலதரப்பட்ட நிபுணர்களைக் கொண்ட குழு, பல்வேறு மாதிரிகள் மற்றும் காரணிகளை பகுப்பாய்வு செய்து வருகிறது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்: இதற்கிடையில், "காஞ்சிபுரம் மாவட்டத்தில் தயாரான இருமல் மருந்தை சாப்பிட்ட குழந்தைகள் வடமாநிலத்தில் உயிரிழந்துள்ளது தொடர்பாக குறித்து டிரக் கண்ட்ரோல் அலுவலரிடம் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர் தற்போது விசாரணை செய்து வருகிறார்.

விசாரணை முடிந்த பின்னர் இது குறித்த விரிவான தகவல் தெரிவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அந்த வகை இருமல் மருந்து விற்பனையாகி வருகிறதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகிறோம். காலாவதியான மருந்தை உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்திருக்கலாம் என்கிற ரீதியிலும் விசாரணை நடைபெற்று வருகிறது என தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திமுகவினர் என்றால் ஏவல்துறை; அப்பாவிகள் என்றால் அராஜகத் துறை: நயினார் நாகேந்திரன்

**சென்னை,அக்.6:**

மக்களைக் காக்க வேண்டிய போலீசார், திமுகவினர் குற்றம் புரியும் போது ஏவல்துறையாகவும், அப்பாவிகள் அகப்படும்போது அராஜகத் துறையாகவும் மாறுவது ஏன்? என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பி உள்ளார்.

அவரது அறிக்கை: நெல்லை மாவட்ட போலீசாரால் கடந்த இரண்டு ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட 217 பேர் கை கால்களில் காயமுற்று மாவட்ட அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிய வந்துள்ளது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும் என்று ஆட்சி அமைக்கும் முன் வீர வசனம் பேசிவிட்டு, ஆட்சி அரியணை ஏறியதும் குற்றங்கள் நிகழாது தடுப்பதைவிட்டு, குற்றம் புரிந்ததாக சந்தேகப்படும்



நபர்களை அடித்து அச்சுறுத்துவது தான் திராவிட மாடலா?


கடந்த 2023ம் ஆண்டில் குற்றவாளிகளின் பற்களை உடைத்ததால் நெல்லை ஏ.எஸ்.பி., பல்வீர் சிங் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பின்பும், இன்றுவரை நெல்லை போலீசார் பாடம் கற்றுக்கொள்ளாதது ஏன்? மக்களைக் காக்க வேண்டிய போலீசார், திமுகவினர் குற்றம் புரியும் போது ஏவல்துறையாகவும், அப்பாவிகள் அகப்படும்போது அராஜகத்துறையாகவும் மாறுவது ஏன்?

இப்படித் தொடர்ந்து கட்டுக்கடங்காமல் குரூரப்போக்குடன் செயல்படும் போலீசாரால் மேலும் பல அப்பாவி அஜித்குமார்கள் பலியாக நேரிடுமே தவிர, பொதுமக்களின் பாதுகாப்பு என்றும் மேம்படாது என்பதை சட்டம் ஒழுங்கை நேரடிக் கண்காணிப்பில் வைத்திருக்கும் முதல்வர் ஸ்டாலின் இனியாவது உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

## சனி மஹா பிரதோஷம் வழிபாடு





**திருவண்ணாமலை, அக். 6:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் வளர்பிறை சனி மஹா பிரதோஷத்தை முன்னிட்டு பால்,தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், வெட்டி வேர்,தேன், விபூதி, பஞ்சாமிர்தம், எண்ணற்ற வாசனை திரவியங்களைக் கொண்டு, மூலவர், உற்சவர்,நந்திகேச பெருமானுக்கு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து வில்வத்தினால் அர்ச்சனை செய்து மற்றும் உற்சவர் மூன்று முறை மந்திரங்கள் ஒலிக்க ஆலயம் சுற்றி வந்தன. சங்குகள் முழங்க, மேல தாளங்கள் இசைக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாரதனையும் நடைபெற்றது.

உற்சவமூர்த்திகள் காமதேனு வாகனத்தில் திருவீதி உலாவும் நடைபெற்றது. பக்தர்கள் நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எம்பெருமானாரின் வாழ்க்கையும் நெறியும்





எம்பெருமானார்(ஸ்ரீ ராமானுஜர்) வாழ்க்கையும் நெறியும் தெய்வீக ஆவணப்படம், திருவானைக்காவல் நெல்சன் ரோடு மங்களம் கன்வென்ஷன் ஹாலில் நேற்று முன்தினம் (04.10.25) திரையிடப்பட்டது.

"அரங்கனின் முன் அனைவரும் சமம்"என வெறும் உபதேசத்தோடு நில்லாது அதன்படி வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீ ராமானுஜர் அன்றைய உள்துறை வீதி தான் இன்றைய உத்தரவீதி என அழகாக விளக்குகிறார் பாம்பே கண்ணன். ஆலயத்தில் பணிபுரிந்த பட்டர்கள், மடப்பள்ளி பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஒரே இடத்தில் இல்லங்கள் அமைக்கப்பட்டு அந்த வீதியே "உள்துறை (பணியாளர்கள் ) வீதி" என்றழைக்கப்பட்டு, பின்னாளில் அது உத்தரவீதி ஆனதாம்.

இந்தப்படத்தை திரு. ஜெ.கணேசன் இயக்க, ஜெய் கிஷன் இசை அமைக்க, இயக்க மேற்பார்வை, தனி நடிப்பு வர்ணனை செய்ததுடன் பொன்னியின் செல்வன் அண்ட் ஃப்ரெண்ட்ஸ் உடன் இணைந்து இதன் தயாரிப்பு பணியையும் பாம்பே கண்ணன் மேற்கொண்டுள்ளார்.

இதனை பென்டிரைவ் ஆக பெற விரும்புவோர் மேலே உள்ள அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## சனி மஹா பிரதோஷம் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, அக். 6:** திருவண்ணாமலை மாவட்டம் அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயிலில் வளர்பிறை பிரதோஷம் சனி மஹா பிரதோஷத்தை முன்னிட்டு பெரிய நந்திகேச பெருமானுக்கு பால்,தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், வெட்டி வேர்,தேன், விபூதி, பஞ்சாமிர்தம், எண்ணற்ற வாசனை திரவியங்களை கொண்டு பெரியநந்திகேச பெருமானுக்கு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து வில்வத்தினால் அர்ச்சனை செய்து சங்குகள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க மேல தாளங்கள், மேல வாத்தியங்கள் இசைக்க, சங்குகள் முழங்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மஹா தீபாரதனையும் நடைபெற்றது. பெரிய நந்தி கேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு



**மதுரை, அக். 6:** தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மதுரை மாவட்டமும், மதுரை வடக்குமாசி வீதி மணியம்மை மழலையர்&தொடக்கப் பள்ளியும் இணைந்து நடத்தும் திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு நடந்தது. திருவள்ளுவர் மாமன்றத்தின் தலைவர் க.இராசேந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.உடன் தமிழறிஞர் அழகுராசன், தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி, உள்ளனர்.

## தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயற்குழு



**இராமநாதபுரம், அக். 6:** தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயற்குழு கூட்டம் இராமநாதபுரம் தனியார் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் ஜெ.ஜே.லியோன் தலைமை வகித்தார். பள்ளி தாளாளர் சொர்ண கணபதி, மூத்த மாவட்ட நிர்வாகி நவனீத கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்.

அறிவியல் பாடகர் கரிசல் கருணாநிதியின் பாடலுடன் கூட்டம் தொடங்கியது.மாவட்ட துணைத் தலைவர் கணேசன் வரவேற்றுப் பேசினார்.

கூட்டப்பொருள் குறித்து மாவட்டச் செயலர் காந்தி விளக்கிப் பேசினார்.

இரங்கல் தீர்மானம், குழந்தைகள் அறிவியல் மாநாடு, துளிர் திறனறிதல் தேர்வு, உறுப்பினர் சேர்க்கை, மாநில அலுவலக கட்டிட நிதி, வட்டாரக் கிளை மாநாடு, மாவட்ட மாநாடு குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


பேரலையின் சாட்சியம் நூலை வெளியிட்ட மாவட்ட செயலர் காந்திக்கு பொன்னாடை அணிவித்து, செயற்குழுவில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

முன்னாதக, துளிர் திறனறிதல் தேர்வு போஸ்டரை பள்ளி தாளாளர் சொர்ண கணபதி வெளியிட, மூத்த நிர்வாகிகள் நவனீதகிருஷ்ணன், துரைப்பாண்டியன் பெற்றுக் கொண்டனர்.

நிறைவாக, மாவட்டப் பொருளாளர் பாலமுருகன் நன்றி கூறினார்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகிகள் ஜெரோம், சசிகுமார், சுரேந்தர் பாரதி, துஷ்யந்தி போன்றோர் செய்திருந்தனர்.

## ஸ்ரீவைகுந்த பெருமாள் 3-ஆம் சனிக்கிழமை முன்னிட்டு கருட சேவை



**திருவண்ணாமலை, அக். 6:** திருவண்ணாமலை மாவட்டம்போளூர் வட்டம் ஆர். குண்ணாத்தூர் ஊராட்சியில் அமைந்திருக்கும் ஸ்ரீவைகுந்த பெருமாள் 3-ஆம் சனிக்கிழமை முன்னிட்டு கருட சேவை சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீவைகுந்த பெருமாளை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பொன்னியம்மன் ஆலய மண்டல பூஜை




**விழுப்புரம், அக்.6:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சின்னகரம் ஊராட்சியல் அமைந்துள்ள பொன்னியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த ஆவணி மாதம் 19 ந் தேதி வெகு விமர்சையாக நடைபெற்றது

அதனைத் தொடர்ந்து தினந்தோறும் அபிஷேக ஆராதனை நடைபெற்று வருகின்றன ஞாயிற்றுக்கிழமை அன்று கோவில் தர்மகர்த்தா குடும்பத்தினர் சார்பில் சிவஸ்ரீ. வெ.ராம்குமார் சோமயாஜி பசுமலை சுப்பரமண்ய சுவாமி தேவஸ்தானம் மேல் ஒலக்கூர் அவர்களால் அபிஷேக ஆராதனை நடைபெற்று அன்னதானம் வழங்கப்பட்டன

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## தமிழ்நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கூட்டத்தை வேரோடும்- வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும்- மு.க.ஸ்டாலின்




**சென்னை, அக். 6:** சென்னை கோட்டூர்புரம் அண்ணா பல்கலைக்கழக பகுதியில் இன்று மாரத்தான் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த மாரத்தான் ஓட்டப் பந்தயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.நேற்று அதிகாலை தொடங்கிய இந்த மாரத்தான் போட்டியில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தாம்பரத்தை சேர்ந்த 24 வயது வங்கி ஊழியரான பரமேஷ் என்பவரும் மாரத்தான் போட்டியில் பங்கேற்றார்.

இந்தநிலையில் ஓடத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே பரமேசுக்கு வலிப்பு ஏற்பட்டது. தரையில் சுருண்டு விழுந்தார். அவரைப் பார்த்து மாரத்தானில் பங்கேற்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் மூலம் பரமேஷ் உடனடியாக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால், மருத்துவமனையில் அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரஜினிகாந்த் திடீர் இமயமலை பயணம் வைரல் புகைப்படங்கள்



**ரிஷிகேஷ், அக். 6:** சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் தான் நடித்த படம் வெளியாகும் முன்பு இமயமலைக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொள்வதை வழக்கமாக வைத்துள்ளார். ஆன்மீகவாதிகளுடன் அவருக்கு நட்பு அதிகரித்த பிறகு அவரிடம் இந்த பழக்கம் உருவானது.

இந்நிலையில், ரஜினிகாந்த் ஒரு வார கால ஆன்மீகப் பயணமாக இமயமலை சென்றுள்ளார். இமயமலை பயணம் மேற்கொண்டுள்ள நடிகர் ரஜினிகாந்த் நேற்று பத்ரிநாத் செல்கிறார்.

இதனை தொடர்ந்து பத்ரிநாத்திலிருந்து பாபா குகைக்கு செல்லவுள்ள ரஜினிகாந்த் ஒரு வாரம் அங்கு தங்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன ரிஷிகேஷ் ஆசிரமத்தில் இருந்து ரஜினிகாந்த் பத்ரிநாத் செல்லும் வழியில் எடுக்கப்பட்ட படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## சென்னையில் தீபாவளி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்- 18 ஆயிரம் போலீசார் கண்காணிப்பு



**சென்னை, அக். 6:** சென்னையில் மற்ற பகுதிகளை விட தி.நகர் பகுதியில் தான் அதிக அளவில் பொதுமக்கள் ஜவுளி மற்றும் பொருட்களை வாங்குவதற்காக கூடுவார்கள். இதனை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் அங்கு தீபாவளியையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

அந்த வகையில் இந்த ஆண்டும் தி.நகரில் தீபாவளிக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தி.நகர் ரங்கநாதன் தெருவில் 5 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பஸ் நிலையம் மற்றும் அருகிலுள்ள இன்னொரு சாலையிலும் கண்காணிப்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளது.

இதன்மூலம் தி.நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் 5 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் பொருத்தப்பட்டு போலீசார் கண்காணிக்க உள்ளனர்.

தீபாவளி பண்டிகையை யொட்டி தி.நகரில் மட்டும் 80 கண்காணிப்பு கேமராக்கள் மூலமாக பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின்பேரில், கூடுதல் கமிஷனர் கண்ணன் மேற்பார்வையில், தி.நகர் துணை கமிஷனர் குத்தாலிங்கம், உதவி கமிஷனர் சுரேஷ், இன்ஸ்பெக்டர் ரஞ்சித் மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.தி.நகரில் மட்டும் 80 கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த கேமரா காட்சிகளின் செயல்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இன்னும் சில தினங்களில் கமிஷனர் அருண் நேரில் ஆய்வு செய்ய உள்ளார்.

மாதத்தின் தொடக்க நாளாகவும் ஞாயிற்றுக் கிழமையாகவும் இருப்பதால் இன்று மாலையில் தி.நகர் பகுதியில் பலர் ஜவுளி எடுக்க அதிக அளவில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இதேபோன்று பாரி முனை, புரசைவாக்கம், வண்ணாரப் பேட்டை உள்ளிட்ட பகுதிகளிலும் தீபாவளியையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகர பகுதியில் மட்டும் 18 ஆயிரம் போலீசார் தீபாவளியையொட்டி பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட இருக்கிறார்கள்.

அனைத்து பகுதிகளிலும் குற்ற செயல்களை தடுக்கும் வகையில் போலீசார் அதிக அளவில் ரோந்து பணியில் ஈடுபட வேண்டுமென கமிஷனர் அருண் அறிவுறுத்தி இருக்கிறார்.

இதன்படி இணை கமிஷனர்கள் துணை கமிஷனர்கள் உள்ளிட்டோர் தங்களது பகுதிகளில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள தொடங்கியுள்ளனர்.

## பழனியில் முன்னாள் கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ்.லட்சுமண் சாமி தரிசனம்

**பழனி, அக். 6:** பழனி முருகன் கோவிலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலம், வெளி நாடுகளில் இருந்து முக்கிய பிரமுகர்கள், நடிகர்கள், கிரிக்கெட் வீரர்கள் சாமி தரிசனத்திற்கு வருகின்றனர்.


அதன்படி தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் மாநிலத்தை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ்.லட்சுமண் தனது குடும்பத்தினருடன் இன்று காலை பழனி முருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்வதற்காக வந்தார்.

அடிவாரத்தில் இருந்து ரோப்கார் மூலம் மலைக்கோவிலுக்கு சென்ற அவர் இன்று காலை நடைபெற்ற பூஜையில் கலந்து கொண்டார்.

பின்னர் கோவில் நிர்வாகம் சார்பில் வி.வி.எஸ்.லட்சுமணுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. அவரை பார்த்து இன்ப அதிர்ச்சியடைந்த பக்தர்கள் புகைப்படம் மற்றும் செல்பி எடுத்துக் கொண்டனர். திண்டுக்கல் அருகில் உள்ள காந்திகிராம பல்கலைக்கழகத்தில் வி.வி.எஸ்.லட்சுமணுக்கு டாக்டர் பட்டம் வழங்க உள்ளனர்.

அதற்காக வந்த அவர் பழனியில் சாமி தரிசனம் செய்ததாக தெரிவித்தனர்.

# சனி மஹா பிரதோஷ வழிபாடு..



கடலூர் மாவட்டம் அக்டோபர் -5 புவனகிரி மெயின் ரோட்டில் அமைந்திருக்கும் ஸ்ரீ வெள்ளியம்பலம் சுவாமிகள் மடத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ மீனாட்சி சமேத சோமசுந்தரேஸ்வரர் ஆலயம் சனிப்பிரதோஷம் சிறப்பு அலங்காரம், அபிஷேகம், பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பிரதோஷ வழிபாட்டில் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். பிரசாதங்களும் வழங்கப்பட்டன.



திருவண்ணாமலை மாவட்டம் அக்டோபர்-5 துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேடந்தவாடி ஊராட்சியில் அமைந்திருக்கும் வேதமா நகர் எனும் வேடந்தவாடி கிராமத்தில் அருள்தரும் வேதநாயகியம்மை உடனமர் அருள்மிகு வேதநாத ஈஸ்வரர் திருக்கோயிலில் வளர்பிறை பிரதோஷம் சனி மஹா பிரதோஷத்தை முன்னிட்டு ராமன் ஐயர் அவர்களால் பால்,தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், வெட்டி வேர்,தேன், விபூதி, பஞ்சாமிர்தம், கரும்புச்சாறு எண்ணற்ற வாசனை திரவியங்களைக் கொண்டு, மூலவர், உற்சவர்,நந்திகேச பெருமானுக்கு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து வில்வத்தினால் அர்ச்சனை செய்து மற்றும் உற்சவர் மூன்று முறை மந்திரங்கள் ஒலிக்க ஆலயம் சுற்றி வந்தன. சங்குகள் முழங்க, மேல தாளங்கள் இசைக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாரதனையும் நடைபெற்றது. நந்திகேச பெருமானுக்கு விபூதியால் அலங்கரித்தனர். 500-க்கும் மேற்பட்ட பக்தர்கள் நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது




சிறுமையுவு நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். - குறள் 98

ఎదిరి కదురులేని యింపైన మాటలే
యిహోపరాల రెంట నిచ్చు సుఖము. - కురల్ 98

ओछापन से रहित जो, मीठा वचन प्रयोग ।
लोक तथा परलोक में, देता है सुख-भोग ॥ - कुराल 98

Sirumaiyul Neengiya Insol Marumaiyum
Immaiyum Inpam Tharum - Kural 98

## இன்று மாலை சென்னையில் சத்யநாராயணா பூஜை




**சென்னை, அக். 6:**

சென்னை மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ள ஏஎம்ஆர் திருமண மண்டபம் அருகில் ஐஸ்வர்யா ஜாதகாலயா நடத்தும் இன்று திங்கட்கிழமை பௌர்ணமி தினத்தில் 71வது "ஸ்ரீ சத்திய நாராயணா பூஜை" நடைபெறுகிறது. ஸ்ரீ விஷ்ணு பெருமாள் அவதரித்த பல அவதாரங்களுல் ஸ்ரீ சத்தியநாராயணர் அவதாரமும் ஒன்றாகக் கருதப்படும். பௌர்ணமி திதியில் (பௌர்ணமி நாளில்) ஐஸ்வர்யா ஜாதகாலயத்தால், ஸ்ரீ சத்தியநாராயண சுவாமிக்கு ஸ்ரீ சத்தியநாரயண பூஜை நடத்தப்படவுள்ளது. ஆகவே ஐஸ்வர்யா ஜாதகாலயாவில் (06.10.2025-திங்கட்கிழமை) - பௌர்ணமியை முன்னிட்டு ஸ்ரீ சத்திய நாராயணா பூஜை இன்று மாலை 4.30 மணி முதல் நடைபெறும், நுழைவு கட்டணம் மற்றும் பிரசாத கட்டணம் எதுவும் இல்லை - பல பக்தர்களும் ஐஸ்வர்யா ஜாதகாலயா நடத்தும் ஸ்ரீ சத்தியநாராயண பூஜையில் பங்கேற்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அனைத்து பக்தர்களும் எங்கள் வளாகத்துக்கு நேரில் வந்து பூஜையில் கலந்து கொள்ளலாம், பக்தர்கள் பூஜையின் தொடக்கத்தில் சங்கல்பம் செய்ய வேண்டும் மற்றும் முழு பூஜையில் கலந்து கொள்ளவேண்டும். புனிதமான ஸ்ரீ சத்தியநாராயண கதையைக் கேட்பது இப்பூஜையின் மிக முக்கியமான பகுதியாகும், பூஜையின் போது இறைவனுக்கு அளிக்கப்படும் பிரசாதத்தை பக்தர்கள் எடுத்துக் கொள்வது மிக நல்லதொரு புண்ணிச் செயலாகவே கருதப்படுகிறது. ஸ்ரீ சத்யநாராயண பூஜையில் பங்கேற்பதன் மூலம் பெரும்பாலான துன்பங்களுக்கு முடிவு உண்டாகும், எப்போதும் உண்மையாக இருப்பவர்கள் மீது ஆசிகளைப் பொழிவார்கள், பிரசாதம் சாப்பிடுவது தூங்கும் போது அமைதி பெற உதவும், இது இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு வடிவம், முந்தைய பிறவிகளின் கெட்ட கர்மாக்கள் நிவர்த்தி செய்ய வாய்ப்பு கிடைக்கும், கடந்த காலத்தில் புரிந்திட்ட கெட்ட செயல்களின் மோசமான விளைவுகளை சமாளிக்க மனிதர்களுக்கு வாய்ப்பு கிடைக்கலாம், ஒருவரின் வாழ்க்கையின் இலக்குகளை அடைய உதவுகிற பூஜையாக சத்யநாராயணா பூஜை வழிபாடு பலன்கள் கொடுப்பதாக கூறப்படுகிறது. இதுபற்றி பக்தர்கள் அறிந்து கொண்டு பூஜையில் கலந்து கொள்ள 9884141870 என்ற நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.

## மதுரை டெம்பிள் சிட்டியில் நவராத்திரி விழா

**மதுரை, அக். 6:**

மதுரை டெம்பிள் சிட்டியில் நடைபெற்ற பத்துநாள் நவராத்திரி விழா கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

மதுரை அக் 6 மதுரையில் சைவ உணவகங்களின் ஆலயம் என தென்மாவட்ட மக்களால் அழைக்கப்படும் டெம்பிள் சிட்டி ஹோட்டல் உரிமையாளர் சுப்புராமன் தனது திருமாளிகையில் பதினெட்டாம் ஆண்டு நவராத்திரி திருவிழா பத்து நாட்கள் நடைபெற்றது. இவ்விழாவில் அம்மனுக்கு பல்வேறு அலங்காரம் செய்யப்பட்டு அனைத்து வகையான பூக்கள் காய்கள் பழங்கள் மற்றும் இனிப்புகள் கொண்டு கோலம் போடப்பட்டு தினமும் சிறப்பு பூஜைகள், ஆன்மிக சொற்பொழிவு, பரதம் நாட்டியம், போன்ற கலைநிகழ்ச்சிகள் கொண்டாடப்பட்டது. கொலு அலங்காரத்தை கான ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். நவராத்திரி விழா காண வருகை தந்த



அனைவருக்கும் டெம்பிள் சிட்டி உரிமையாளர் சுப்புராமன் குடும்பத்தினர் வர வேற்று பரிசுகள் வழங்கினார்கள்.

## ரூ.100 கோடி நிலக்கரி மாயமான விவகாரம் விசாரணையை மூடி மறைக்கும் மின் வாரியம்

**சென்னை, அக். 6:**

வடசென்னை, தூத்துக்குடி அனல் மின் நிலையங்களில், 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலக்கரி மாயமான விவகாரத்தில் விசாரணை நடத்திய மின் வாரியம், நான்கு ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தாமதம் செய்கிறது. இது, முறைகேட்டில் ஈடுபட்டவர்களை காப்பற்றும் முயற்சியா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் வடசென்னை, சேலத்தில் மேட்டூர் மற்றும் தூத்துக்குடியில், மின் வாரியத்திற்கு, 4,320 மெகா வாட் திறனில், ஐந்து அனல் மின் நிலையங்கள் உள்ளன. இவற்றில் மின் உற்பத்திக்கு எரிபொருளாக பயன்படுத்தப்படும் நிலக்கரி, ஒடிசா மாநில சுரங்கங்களில் இருந்து எடுத்து வரப்படுகிறது.

கடந்த, 2021 மார்ச் நிலவரப்படி, வடசென்னை மின் நிலையத்தில், கொள்முதல் செய்ததை விட, 2.38 லட்சம் டன் நிலக்கரி இருப்பு குறைவாக இருந்தது. இதேபோல், தூத்துக்குடி மின் நிலையத்தில், 72,000 டன் நிலக்கரி இருப்பு குறைவாக இருந்தது.

இவற்றின் மதிப்பு, 100 கோடி ரூபாய். இதை, அந்தாண்டு ஆகஸ்டில், அப்போதைய மின்துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி தெரிவித்தார். அவரும், மின்



வாரிய உயரதிகாரிகளும் இரு அனல் மின் நிலையங்களுக்கும் சென்று, நிலக்கரி மாயமானதை உறுதி செய்தனர்.

இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக, மின் தொடரமைப்பு கழக மேலாண் இயக்குநர் தலைமையில் விசாரணை குழு அமைக்க, அப்போதைய அமைச்சர் செந்தில் பாலாஜி உத்தரவிட்டார். அதன்படி விசாரணை நடத்தப்பட்டது. அதில், நிலக்கரி மாயமானது உறுதி செய்யப்பட்டு, அறிக்கையும் சமர்ப்பிக்கப்பிட்டது. நான்கு ஆண்டுகளாகியும் விசாரணை அறிக்கையை, மின் வாரியம் வெளியிடாமல் உள்ளது. இது முறைகேட்டில் ஈடுபட்டவர்களை காப்பாற்றும் முயற்சியா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதுகுறித்து, மின் வாரிய பணியாளர்கள் கூறியதாவது: விசாரணை அறிக்கை வெளியானால் தான், தவறு செய்தவர்கள் யார் என்பது தெரியவரும்.

அவர்களிடம் இருந்து இழப்பீட்டு தொகை வசூலிப்பதுடன், சட்டப்படி மேல் நடவடிக்கை எடுக்க முடியும். இல்லையேல், நிலக்கரி மாயமானதாக கூறப்படும் புகாரில் உண்மை இல்லை என்று கூறவும் வாய்ப்புள்ளது. இனியும் காலதாமதம் செய்யாமல், நிலக்கரி மாயமான விவகாரம் தொடர்பான விசாரணை முடிவை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## டிசம்பரில் மதுரை மீனாட்சி கோயில் கும்பாபிஷேகம்

**மதுரை, அக். 6:**

மதுரையில் நேற்று அறநிலையத்துறை அமைச்சர் கூறியதாவது: அதிகளவு குடமுழுக்கு நடத்திய ஆட்சியாக தி.மு.க., ஆட்சி உள்ளது. நான்காண்டு காலத்தில் 3707 கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்துள்ளது.

மீனாட்சியம்மன் கோயில் திருப்பணிகளில் 186 பணிகள் செய்வதற்கு ரூ.23.70 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 112 பணிகளுக்கு கோயில் நிதியில் இருந்து ரூ.8.90 கோடியும், 69 பணிகள் உபயதாரர் நிதி மூலம் ரூ.14.80 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் டிசம்பரில் முடியும்.

இங்குள்ள வீரவசந்தராயர் மண்டபத்தில் 2018 பிப்ரவரியில் தீ விபத்து ஏற்பட்டது.

புதுப்பிப்பதற்கு தேவைப்படுகின்ற கற்களை எடுக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டது உண்மை தான்.

ஒரே நீளமாக 15 அடிக்கு கல் தேவைப்படுகிற நிலையில் குவாரியில் கிடைப்பது கடினம்.

ரூ.35.50 கோடி மதிப்பீட்டில் செலவு மேற்கொள்ளப்படுகிறது. மொத்தமுள்ள 79 தூண்களில் 18 தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன. தூண்கள் வரப்பெற்று செதுக்கும்



பணி நடக்கிறது. மீதி 11 தூண்கள் அக்.,15 க்குள் வந்து சேரும். இப்பணி டிசம்பரில் நிறைவுபெறும்.

பணிகள் நிறைவடைந்த பின் பிப்ரவரிக்குள் குடமுழுக்கு நடத்துவதா அல்லது வீரவசந்தராயர் மண்டபத்தை விடுத்து டிசம்பரில் குடமுழுக்கு நடத்துவதா என்பதை பட்டர்களுடன் ஆலோசித்த பின் முடிவெடுக்கப்படும்.

மீனாட்சி கோயிலுக்கு உட்பட்ட 18 உபகோயில்களில் 9 கோயில்களுக்கு குடமுழுக்கு முடிந்துவிட்டது. நவம்பருக்குள் இன்னும் 4 கோயில்கள் உட்பட அனைத்து உபகோயில்களுக்கும் பிப்.,க்குள் குடமுழுக்கு நடத்தப்படும்.

திருப்பரங்குன்றம் ரோப்கார் குறித்த சாத்தியக்கூறு அறிக்கை ஆராய்ந்து தரப்பட்டுள்ளது. திட்டத்திற்கான இறுதிவடிவம் கேட்டுள்ளோம். அது வந்தவுடன் டெண்டர் கோரப்படும் என்றார்.

## வைகோவிற்கு திடீர் உடல்நலக்குறைவு: ஆஸ்பத்திரியில் சிகிச்சை

**சென்னை, அக். 6:**



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு நேற்று மாலையில் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. காய்ச்சலால் அவதிப்பட்ட அவர் ஆயிரம் விளக்கில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு டாக்டர்கள் தேவையான பரிசோதனைகளை செய்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இரண்டு நாள் ஆஸ்பத்திரியில் இருந்து அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட உள்ளார்.

## 18 வயது மருமகனை திருமணம் செய்ய முயன்ற 40 வயது மாமியார் மகளை கொலை செய்ய முயற்சி

**திருப்பதி, அக். 6:**

ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டம் கே.வி.பி.புரம் மண்டலத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 18 வயது வாலிபர்.

இவர் அதே பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இருவரும் அதே பகுதியில் வசித்து வந்தனர் இவர்களுடன் கணவனை இழந்த சிறுமியின் 40 வயது தாயாரும் வசித்து வந்தார்.

இந்த நிலையில் மாமியாருக்கும் மருமகனுக்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது சிறுமி வீட்டில் இல்லாத நேரத்தில் இருவரும் தனிமையில் இருந்தனர்.

இதனை அறிந்த சிறுமி தனது கணவர் மற்றும் தாயாரை கண்டித்தார் ஆனாலும் அவர்கள் கள்ளக்காதலை கைவிடவில்லை. மேலும் மாமியார் தனது மருமகனை திருமணம் செய்ய முடிவு செய்தார்.

நேற்று முன்தினம் இரவு



வீட்டிலேயே வாலிபர் தனது மாமியாருக்கு தாலி கட்ட முயன்றார். இதனை கண்ட அவருடைய மனைவி தடுத்து நிறுத்தி வாக்குவாதம் செய்தார்.

ஆத்திரமடைந்த அவரது தாயும் கணவரும் அவரை கடுமையாக தாக்கி கொலை செய்ய முயன்றனர்.

அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்து சிறுமியை மீட்டனர் . மேலும் மாமியார் மற்றும் மருமகனை சரமாரியாக தாக்கினார் அவர்கள் இருவரையும் அங்குள்ள போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீசார் இது குறித்து அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# கவிதை அரங்கம்!





விரும்பியதைப்
பெற காசிருந்தால்
மட்டும் போதாது
பொறுமையும் வேண்டும்

தவறு செய்ய யாரும்
பயப்படுவதில்லை
செய்யும் தவறு வெளியே
தெரிய கூடாது
என்றே பயப்படுகிறார்கள்

புரிந்து கொள்ளவில்லை
என்றாலும் பரவாயில்லை
எதையும் தவறாகப்
புரிந்து கொள்ளாதீர்கள்

உங்கள் வாழ்க்கையில்
நீங்கள் மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமா?
யாரிடமும் எதையும்
எதிர்பார்க்காதீர்கள்

சூழ்நிலை எதுவாயினும்
உன்னை நம்பி வந்தவரை
ஒரு நாளும் ஏமாற்றாதே
விருப்பம் இருந்தால்
ஆயிரம் வழிகள்
விருப்பம் இல்லாவிட்டால்
ஆயிரம் காரணங்கள்
இவை தான்
மனிதனின் எண்ணங்கள்

## “எப்போதும் வலிமையனவரா இருக்க சிரமமா இருக்கு...”



வலியை விட கடினமானது என்ன தெரியுமா?

உள் குமுறலோட இருக்கும்போதும், சிரிச்சுக்கிட்டு நடிக்கணும் என்பது.

எப்போதுமே வலிமையனவரா இருக்கறவங்க...

எதையும் ஜெயிக்கக்கூடியவங்க...

எந்த வேதனையையும் தாங்கறவங்க...

நம்மள பத்தி நெறைய சொல்லிட்டே போலாம்

ஆனா ஒரு பெரிய மலை கூட

அதிகமான புயல் வந்தா இடியுடன் நொறுங்கும்...

சூரியனே கூட சில நாட்கள் மேகத்துக்குள்ள மறைந்து விடும்...

எதுவும் நடக்கலாம்..

சில சமயங்களில் அமைதியாக இருப்பதும் தான் உண்மையான வலிமை.

சலிப்பா இருந்தா அமைதியா நடக்கலாம்,

மனச்சோர்வா இருந்தா அழலாம்...

நீங்கள் இன்னும் வலிமையனவர்தான்...

ஏனென்றால் உண்மையான வலிமை என்பது

"நான் சில நேரம் சோர்வாக உணர்கிறேன் " என்று புரிந்து கொள்வதிலும் இருக்கிறது ...

அதன் பின் மீண்டு எழுவதிலும் இருக்கிறது....

வாழ்க வளமுடன்

நன்றி - ஆனந்தி

# பந்தபாசம்



இரண்டு அட்டைப் பெட்டிகள், இரண்டு பெரிய பைகள், இரண்டு கைப்பைகள் என எண்ணி எண்ணிப் பார்த்து எடுத்து வைத்து இரவு பஸ்ஸில் குடும்பத்துடன் கிளம்ப தயாரானார் தணிகாசலம்.

முன் பதிவு செய்த பேருந்தில் ஏறி சாமான்களை சரிபார்த்து வைத்து இருக்கையில் அமர்ந்தார்.

மனைவி வசந்தா, மகன் விஜய், மகள் அனிதா எல்லோருடனும் பயணம் ஆரம்பித்தது.

சென்னையில் ஆட்டோ ஓட்டிப் பிழைப்பு நடத்தி வந்தார் தணிகாசலம். தங்கை பெண்ணிற்கு தன்னால் முடிந்த அளவு எல்லாம் சபை நிறைய செய்ய உத்தேசித்து கிளம்பி விட்டார்.

வசந்தா எப்போதுமே கணவர் சொல்லை மீற மாட்டாள்.

குழந்தைகளையும் நல்ல பழக்க வழக்கங்களுடனே வளர்த்திருந்தார்கள்.

நல்லதொருக் என்ன குடும்பம் என்று சொல்லலாம்.

ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது தணிகாசலத்திற்கு.

சம்பாதிப்பதை குடும்பத்திற்கே செலவழித்து ஏதோ ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள்.

பேருந்து கிளம்பி இரண்டு மணி நேரம் இருக்கும். மகள் அனிதாவிற்கு பாத்ரூம் வருவதாக சொல்லவே கண்டக்டர் டிரைவரிடம் சொல்லி கொஞ்சம் பேருந்தை நிறுத்தும்படி கேட்டார்.

"கொஞ்சம் பொறுங்கைய்யா, பத்து நிமிஷத்துல நிக்கும், போய்க்கலாம்" என்றதும் இருக்கைக்கு வந்து அமர்ந்தார்.

அனிதாவும் புரிந்து கொண்டாள்.

பொலபொலவென பொழுது விடிந்தது. கடைசி நிறுத்தத்தில் இறங்க வேண்டி இருந்ததால் தயாராக எழுந்து நின்றார்கள்.

மெல்ல ஒவ்வொருவராக இறங்கியபின் தணிகாசலம் லக்கேஜுகளை சரி பார்த்து இறக்கி வைத்தார்.

கடைக்குப் போய் கொஞ்சம் பூ, பழங்கள் வாங்கிக் கொண்டு ஒரு ஆட்டோவில் பேரம் பேசினார்.

இருவர் மசியவில்லை.

மூன்றாமவர் ஒத்து வரவே நால்வரும் ஏறினார்கள்.

வாசலில் கலர்க் கோலங்களும், தெரு அடைத்துப் பந்தல் போடப்பட்டு உள்ளூர் பக்கத்து கிராமத்து சொந்தங்கள் கூடி யிருந்தார்கள்.

கல்யாணப் பெண் கமலி மாமாவை ஓடிவந்துக் கட்டிக் கொண்டாள்.

"வாங்க மாமா, வாங்க அத்தை, வாடா செல்லம், வா அனி" என்று உணர்வுப்பூர்வமாய் உள்ளம் பூரிக்க முகமெல்லாம் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்திருக்க வரவேற்று அழைத்துப் போனாள்.

"வாங்கண்ணே, வாங்க அத்தாச்சி, வாங்க மச்சான், வாங்க அண்ணி என்று அவரவர் முறையைச் சொல்லி வரவேற்றனர்.

வீராயி மட்டும் ஓலைக் குடிசையில் காத்திருந்தாள். மகன் வருகைக்காக.

வயதானாலும் தன் வேலைகளை தானே செய்து கொண்டு வயலில் வேலை செய்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பட்டணத்து வாழ்க்கை அவளுக்கு பிடிக்கவில்லை.

மகன் வந்ததும் முக்கியமான ஒரு சேதி சொல்லக் காத்திருந்தாள்.

பால்காரன் மதி வாசலிலேயே, "என்ன தணி வந்துருக்கானா" என்று உரிமையோடு கேட்டான்.

சப்தம் கேட்டு தணிகாசலமும் "எலேய், மதிவாணா, எப்படிடா இருக்க?" என்று கேட்டுக்கொண்டே வந்து தோளில் கைபோட்டுப் பேசினான்.

"ஆத்தாள பாத்துட்டியா" என்று மெல்லக் கேட்டான். "ஒன்னப் பாத்துச்சுன்னா சந்தோசப்படும்" என்றான்."இந்தோடா, இப்பத்தேன் வந்தோம். புள்ளங்களக் கூட்டிக் கிட்டு போவேன்டா" என்றான்.

வீராயி மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தார்.

மகனையும், மருமகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்த்த சந்தோஷம் ஒரு பக்கம். மகன் ஜரிகை சேலை வாங்கி வந்த சந்தோஷம். பேரப்பிள்ளைகள் "அப்பாயீ, நல்லாயிருக்கீங்களா" என்று கேட்டதும் ஒரு காரணம்.

"ஏ புள்ள வசந்தா, என்னாடீ மொய் செய்யப் போறீங்க" என்று கேட்டாள்.

"கமலிக்கும், மாப்பிள்ளைக்கும் மூனு மூனு கிராம்ல மோதிரம் வாங்கியாந்தோம்.

"பொடவை, வேஷ்டி, தங்கச்சி மாப்பிள்ளைக்கும் சேர்த்து வாங்கிக் கொண்டாந்துருக்கோம்" அத்தை என்றாள் மருமகள் வசந்தா.

"தட்டு வரிசை பதினைந்து வக்கப் போறோம்" என்றாள் வசந்தா.

"இல்லப் புள்ள கமலி அப்பன் குடும்பத்துல ஏசுவாக மா. பொண்ணுக்கு நகை நட்டு போடணும்னு சொல்லுவாங்க. நம்ப கஸ்டம் அவுகளுக்கு தெரியாது." என்றாள் வீராயி.

"அவுகளும் இதெல்லாமே கஸ்டப்பட்டுத்தேன் செய்யிறாக. கடன் வாங்குனா கட்றது கஷ்டம் அத்தை" என்றாள்.

"உள்ளார வா என்று வசந்தாவை அழைத்துக் கொண்டு உள்ளே போன வீராயி, ஒரு சின்ன சில்வர் டப்பியிலிருந்து இரண்டு பவுன் தங்கச் சங்கிலியை எடுத்துக் கொடுத்தாள்.

அதிர்ந்தாள் வசந்தா. "என்னங்க அத்தை இது?" என்றாள்.

"ஆமாம்மா கமலி வயசுக்கு வந்ததுமே என் மக தேனு எங்கிட்ட கொஞ்சம் கொஞ்சமா பணம் கொடுத்து "புள்ளைக்கு கலியாணம் வச்சேன்னா, அண்ணங்கிட்ட குடுத்து போடச் சொல்லு. அது யார் முன்னாடியும் தலை குனியக்கூடாதுன்னு சொல்லிட்டாமா".

"இதப் பத்திரமா கொண்டு போவோம். இதோ நானும் கெளம்பி வாறேன்" என்றாள்.

"இல்ல அத்தை, அவுங்க என்ன சொல்லுவாங்களோ தெரில" என்றதும் "மெல்ல எடுத்துச் சொல்லு புரிஞ்சுக்கிருவான்" என்றாள்.

இதோ ஊரார் முன்னாடி தாய்மாமன் சீரை அனைவரும் மெச்சும்படியாக செய்து விட்டார் தணிகாசலம்.

தங்கச்சியின் ஆனந்தக் கண்ணீரிலும், கமலியின் விரிந்த கண்களிலும் மனது உறுத்தினாலும் மனம் நிறைவாக திருமணம் முடித்து பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைத்தது மகிழ்ச்சியாக இருந்தது.

சின்னப்பலேந்தே அண்ணனும் தங்கச்சியும் பாசமாக இருப்பார்கள்.

அப்பா இறந்ததும் குடும்பத்தை பார்க்க வேண்டி பத்தாம் வகுப்போடு நிறுத்தி வயல் வேலைக்குப் போனார். பிறகு டிரைவிங் கற்றுக்கொண்டு ஒரு நண்பர் மூலம் சென்னை வாசியாகி விட்டார்.

எல்லாம் நல்லபடியாக முடிந்து குடும்பத்துடன் மீண்டும் பேருந்தில் பயணம்.

இந்த முறை கொஞ்ச நாளாவது இருக்கச் சொல்லி அம்மாவையும் அழைத்து வருகிறார். தங்கையின் பாசம், கமலியின் நேசம், ஆத்தாளின் அரவணைப்பு எல்லாவற்றையும் மீண்டும் ஒரு முறை நினைவலைகளோடு பயணம் தொடர்ந்தது.


-வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



மனைவி : என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?”

கணவன் : ரெண்டாவது ‘ஷாக்’ எதுக்குன்னு, தான்..!



# தினம் ஒரு சமையல்



## கொத்தமல்லி ரோல்ஸ்



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கொத்தமல்லி நறுக்கியது | (4 கப்) |
| கடலை மாவு | - 200 கிராம் |
| தேங்காய் துருவல் | - 1 கப் |
| கசகசா | - 2 டீஸ்பூன் |
| வெங்காயம் | - 1 நறுக்கியது |
| பச்சை மிளகாய் | - 1 |
| உப்பு, தண்ணீர் | - தேவையான அளவு |
| எண்ணெய் | - பொரிக்க |
| இஞ்சி-பூண்டு விழுது | - 1 டேபிள் ஸ்பூன் |

**செய்முறை:**

முதலில் கொத்தமல்லியைக் கழுவி சுத்தமாக்கி, அதில் துருவிய தேங்காயைச் சேர்த்து பின்னர் அரிந்த வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி-பூண்டு விழுது, கசகசா சேர்த்து கலவையாக்கி தனியாக வைத்துக்கொள்ளவும்.

கடலைமாவுடன் உப்பு சேர்த்து பிசைந்து, சப்பாத்தியைப் போல திரட்டிக்கொள்ளவும். நடுவில் மேலே கூறிய பூரணத்தை வைத்து நான்காக மடித்துகொள்ளவும்.

முனைகளை ஒட்டுவதற்கு வெண்ணெயை உபயோகிக்கவும்.

இதை எண்ணெயில் பொரித்து, சுட சுட பரிமாறவும்.

இதனுடன் தக்காளி சாஸ் சேர்த்தும் உண்ணலாம்.

கூடுதல் குறிப்பு: மேலே கூறிய கொத்தமல்லி பூரணத்தை சப்பாத்தி மாவுடன் ஒன்றாக பிசைந்து சப்பாத்திப் போல திரட்டி, மசாலா சப்பாத்தியாகவும் பரிமாறலாம்.

# அரத்தை நன்மைகள்



**இரும்புச்சத்து:**

அரைக்கீரையில் இரும்புச்சத்து அதிக அளவில் உள்ளது, இது இரத்த சோகையை தடுக்கவும், உடலுக்கு தேவையான ஆற்றலை வழங்கவும் உதவுகிறது.

**கால்சியம்:**

கால்சியம் சத்து எலும்புகள் மற்றும் பற்களை வலுவாக்க உதவுகிறது, மேலும் இது இதயத்தின் சீரான செயல்பாட்டிற்கு அவசியமானதாகும்.

**நார்ச்சத்து:**

அரைக்கீரையில் நார்ச்சத்து நிறைந்துள்ளது, இது செரிமானத்தை சீராக்க உதவுகிறது மற்றும் மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகளை தடுக்கிறது.

**வைட்டமின் சி:**

வைட்டமின் சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது மற்றும் சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

**குறைந்த கலோரிகள்:**

குறைந்த கலோரிகள் இருப்பதால், உடல் பருமன் மற்றும் இதய நோயாளிகளுக்கு இது ஒரு சிறந்த உணவு.

**மற்ற நன்மைகள்:**

அரைக்கீரை வாதம் மற்றும் கபத்தை சமநிலைப்படுத்த உதவுகிறது மற்றும் உடலுக்கு குளிர்ச்சியைத் தருகிறது.

அரைக்கீரையை பல்வேறு வழிகளில் சமைத்து சாப்பிடலாம். கீரை தோசை, கீரை மசியல், கூட்டு, சூப் என பலவிதமான உணவுகளில் அரைக்கீரையை சேர்த்துக்கொள்ளலாம்



சினிமா

# நாக் அஸ்வின் இயக்கத்தில் சாய் பல்லவி?



நாக் அஸ்வின் இயக்கத்தில் சாய் பல்லவி நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

‘மஹாநடி’ மற்றும் ‘கல்கி 2898 ஏடி’ ஆகிய படங்களின் மூலம் முன்னணி இயக்குநராக வலம் வருபவர் நாக் அஸ்வின். ‘கல்கி 2898 ஏடி’ படத்தின் 2-ம் பாகத்தின் பணிகள் எப்போது தொடங்கும் என்பது தெரியாமல் இருக்கிறது. இதனால் அடுத்ததாக புதிய படமொன்றை இயக்கவுள்ளார் நாக் அஸ்வின்.

முழுக்க நாயகியை மையமாக கொண்டு உருவாகும் இப்படத்தில் நடிக்க சாய் பல்லவியிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவரும் சம்மதம் தெரிவித்திருப்பதாகவும், விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என கூறப்படுகிறது. இதனையும் வைஜெயந்தி மூவிஸ் நிறுவனமே தயாரிக்கவுள்ளது.

சாய் பல்லவி நடிக்கவுள்ள படத்தினை முடித்துவிட்டு, ‘கல்கி 2898 ஏடி’ 2-ம் பாகத்தின் பணிகளை நாக் அஸ்வின் தொடங்கவுள்ளார். இதில் தீபிகா படுகோன் விலகிவிட்டதால் அவருக்கு பதிலாக யார் நடிக்கவுள்ளார் என்பதும் விரைவில் தெரியவரும்.



மயில் கழுத்து நந்திதா ஸ்வேதா

# ராஷ்மிகா நடித்தும் “The Girlfriend” படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவின் முன்னணி கதாநாயகிகளில் ராஷ்மிகா மந்தனா முன்னணி இடத்தில் இருப்பவர். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான குபேரா திரைப்படம் மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் ராஷ்மிகா மந்தனா அடுத்ததாக தி கேர்ள்ஃபிரெண்ட் திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை ராகுல் ரவிந்திரன் இயக்கியுள்ளார். படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. படப்பிடிப்பு பணிகள் முழு வேகத்துடன் நடைப்பெற்று வருகிறது.

இப்படத்தில் தீக்ஷித் ஷெட்டி கதாநாயகனாக நடித்துள்ளார். பிரபல இசையமைப்பாளரான ஹேஷம் அப்துல் வஹாப் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். அல்லு அரவிந்த் வழங்கும் இப்படத்தை தீரஜ் மற்றும் வித்யா இணைந்து தயாரித்துள்ளனர். இந்நிலையில், The Girlfriend திரைப்படம் வரும் நவம்பர் 7ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com